<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 266/2023</u>

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW1–)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகதாஸ் | தொழில் | | உதவி ஆய்வாளர் |
| த/பெ. | : | மாரிமுத்து | ஊர் | | மருவூர் காவல் நிலையம் |
| வயது | : | 54 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**<u>11.03.2026</u>**

**<u>எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மருவூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் மதிவாணன் என்பவரை எனக்குத் தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 02.02.2023–ம் தேதி காலை 09.30 மணிக்கு மருவூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மதிவாணன் என்வர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, தஞ்சாவூர் TMCH மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயளியாக சிகிச்சையில் இருந்த சாத்தனூரை சேர்ந்த சக்திவேல் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று, நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.24/2023, ச/பி. 294(b). 323, 336, 506(1) இதச– ன் கீழ் வழக்கு பதிவுசெய்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2–ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–3ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகாருடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் .

3. வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் 03.06.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ சாட்சிகள் தியாகராஜன் மற்றும் கார்த்திகேணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செயது சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் மகஜர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில், காலை 11.30 மணிக்கு சாத்தனூர் நடுத்தெரு பிள்ளையார் கோவில் அருகே வைத்து 1வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 2, 3 எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றதை தெரிந்துகொண்டார். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் பிரேமா, சாமிநாதன், அபிஷேக்மண்டேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவ ஆவணங்களை பெற்றுள்ளார். **(சக்திவேலின் விபத்துப் பதிவேடுகள் மற்றும் மெடிக்கோ லீகோ பார்ம் முறையே அ.சா.ஆ.6 முதல் 8 –ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 03.07.2023 ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,**

1. வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே உள்ள முன்விரோதத்தை வைத்து கொண்டு எதிரிகள் மீது கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் பேரில், உரிய புலண் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரியை சொன்ன தேதியில், சொன்னயிடத்தில் கைது செய்யவில்லை என்றும் ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்தே தயார் செய்துள்ளார் என்றும் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.